1978 மார்ச் 28]

மாவட்டம், பிரதேசத்திற்கு பிரதேசம் 200 ரூபாய், 400 ரூபாய் என்ற அடிப்படையிலே ஊக்க போனஸ் என்று அறிவிக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்குமானால், அந்த விவசாயிகள் மத்தி யிலே ஒரு கிளர்ச்சி செய்யக்கூடிய அளவுக்கு இதைத் தூண்டி விடுவதாக இல்லையா? ஆகவே, எல்லா ரகத்திற்கும் எல்லா இடங்களிலேயும் ஒரே விதமான ஊக்க போனஸ் கொடுக்க இந்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட ரக கரும்புக்கு மட்டுமே கொடுக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டாக மாண்புமிகு உறுப்பி னர் அவர்கள் சொல்கிறார்கள். குறிப்பிட்ட கரும்புக்கு ஊக்க போனஸ் கொடுப்பது என்பதற்குக் காரணம், அதிக விளைச்சல் ஏற்பட்டு, அதிக உற்பத்தியாக வேண்டுமென்ற அடிப்படையிலே மட்டுமல்லாமல், விவசாயிக்கு அதிக லாபம் தரவேண்டுமென்ற நோக்கத்தில்தான் இவைகளுக்குத் தரப்பட்டு வருகின்றது. ஆகவே, எந்தவிதமான குறுகிய எண்ணமோ, குறுகிய நோக் கமோ இந்த அரசுக்குக் கிடையாது. ஆகவே, விவசாயிகளின் நன்மையைக் கருதித்தான் இப்படிப்பட்ட ஊக்க போனஸ் கொடுக் கப்படுகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வ. சின்னசாமி: துணைத் தலைவர் அவர்களே, இப் போது கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் நாட்டுச் சர்க்கரை, வெல்லம் போன்ற பொருள்களுக்காகக் கரும்பை அரைத்து, காய்ச்சி அதைத் தயாரிப்பதற்கு பக்குவம் தெரிந்தவர்கள் கிராமங்களிலே இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படியிருந்தால், விவசாயத் துறை நிபு ணர்கள் மூலம் கரும்பைப் பக்குவப்படுத்திக் காய்ச்சுவதற்கு, என்ன ரக உரம் சேர்த்தால் அதை நல்ல முறையிலே எடுக்க முடியும் என்று செய்து காட்டுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: துணைத் தலைவர் அவர் களே, கரும்பை ஆட்டி தகுந்த முறையிலே வெல்லம் உற்பத்தி செய்வதற்கான உத்தேசம் இந்த அரசுக்கு இல்லை. தனிப்பட்ட வர்கள் செய்யக்கூடிய வேலை இது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லக்கூடிய யோசனையை வேண்டுமானால், அரசு கவனத்தில் கொள்ளும் என்பதை மட்டும் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வி எண் 683.

(திரு. மு. அம்பிகாபதி, திரு. ரா. மார்க்கபந்து ஆகியோர் எழுந்து நின்றனர்).

திரு. மு. அம்பிகாபதி : இது முக்கியமான கேள்வி ஆயிற்றே ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏற்கனவே இந்தக் கேள்விக்கு 15 நிமிடங்கள் ஆகிவிட்டன. அடுத்து வரும் கேள்வியில் இதைப்பற்றிக் கேட்கலாம்.

இறவைப் பாசனத் திட்டம்.

*வினா—683. திரு. அ. சுவாமிதாஸ் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ் நாட்டில் லிப்ட் இரிகேஷன் திட்டம் எங்கெங்கு செயல்படுத்தப்பட்டிருக்கிறது ?

(ஆ) கன்னியாகுமரி மாவட்டத்தில் விளாத்துறை 'லிப்ட் இரிகேஷன்' திட்டம் செயல்பட்டு வருகிறதா ?

(இ) இல்லையெனில், காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

(அ) தமிழ்நாட்டில் தற்போது எல்லா மாவட்டங்களிலும் இறவை நீர்ப்பாசனத் திட்டங்கள் பல்வேறு வகையில் இயங்கி வருகின்றன.

(ஆ) இல்லை.

(இ) சிற்றாறு பட்டணங்கால் என்னும் திட்டம் செயல்படுத்தப்பட்டவுடன் விளாத்துறை இறவைப் பாசனத் திட்டத்தின் கீழ் பாசன வசதி பெற்ற 648.02 ஏக்கர் நிலங்கள் புதிய திட்டத்தின் கீழ் பாசன வசதி பெற்றது ; எனவே, விளாத்துறை இறவைப் பாசனத் திட்டத்தின் கீழான ஆயக்கட்டு நிலங்களை சிற்றாறு-பட்டணங்கால் ஆயக்கட்டுக்கு மாற்றுவதற்கான பிரேரணைகள் அரசால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. எனவே, விளாத்துறை இறவை பாசனத் திட்டம் 1972 மே மாதம் முதல் முழுமையாகக் கைவிடப்பட்டுள்ளது.

திரு. அ. சுவாமிதாஸ் : இந்த விளாத்துறை லிப்ட் இரிகேஷன் திட்டத்திற்காகப் பொருத்தப்பட்டுள்ள பம்ப் செட்டுகள் எல்லாம் தற்போது அங்கு இல்லை. அவைகளைக் கொண்டு வேறு எங்காவது லிப்ட் இரிகேஷன் திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறதா? வள்ளியாற்றில் வீணாகப் போகிற தண்ணீரைத் தடுத்து நிறுத்தி அந்த பம்ப் செட்டுகளைக் கொண்டு லிப்ட் இரிகேஷன் செய்ய வழி செய்யப்படுமா?